கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எதிர் வரும் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 928,469 ஆன வீத வரி மற்றும் ஏக்கர் வரி முன்னரே பெற்ற வருமானமாக இனங்கணடிருக்கவில்லை. | கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது சரி செய்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது, முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 40,045,558 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும். | முத்திரைக் கட்டண அட்டவணைகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | ரூபா 1,099,589 ஆன வட்டி நிலையான வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும். | எதிர் வரும் ஆண்டின் போது, சரி செய்கிறேன். |
| (ஈ) | கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 418,845 பெறுமதியான ஔடதம் செலவினமாக இனங்கபணப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும். | கணக்குகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | ரூபா 4,516,228 பெறுமதியான வருமானம் ஐந்தொகையில் பெறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் வருமானத்திற்கு எடுப்பதாக அறிவிக்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 02 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும்அட்டவணைக்கிடையில்ரூபா 496,228 ஆன வித்தியாசம் நிலவியது. | மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு 05 ஆண்டு காலமொன்று விஞ்சியிருந்த ரூபா 844,950 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்றை விஞ்சியிருந்த ரூபா 103,631,348 கிடைக்க வேண்டியதாக இருந்தது. | கிடைக்க வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும் | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு 05 ஆண்டு காலமொன்று விஞ்சியிருந்த ரூபா 803,538 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமொன்றை விஞ்சியிருந்த ரூபா 5,876,543 ஆன மீதியொன்று நிலவியது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும் | ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகையை செலுத்த வேண்டிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 08 கணக்கு விடயங்களின் பதிவேடுகள்,அட்டவணைகள்,காலப்பகுப்காய்வு,பற்றுச்சீட்டுகள் மற்றும் கோவைகள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 18,669,972 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | அட்டவணைகள், காலப்பகுப்காய்வு, மற்றும் கோவைகள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நி.பி. 104(4) | 2016 ஆண்டின் போது, பெகோ இயந்திரத்திற்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக இறுதி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்று மாதங்களினுள் இறுதி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நி.பி.104 பிரகாரம், பரிசீலனை முடிவடைந்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி | | | |
| (i) | நி.நி.154(1) | துண்டாடப்படும் காணிகளின் விற்பனை மீதான வரி தொடர்பான பதிவேடொன்று, பேணப்பட்டிருக்கவில்லை. | குறித்த வடிவம் பிரகாரம், பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | நி.நி.218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சகல காணிகள் மற்றும் கட்டிடங்களை கணிப்பாய்வொன்று செய்ய வேண்டும். | எதிர் வரும் ஆண்டின் போது, மேற்கொள்கிறேன். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2018 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | சபையின் 05 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைபிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | எரிபொருள் பாவனை பரிசீலனை மேற்கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1988மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | 05 வருடங்களுக்கு ஒரு முறை வீத வரி பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீடு மீள் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. |

1.5 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவு பிரகாரம் பிரேரனையொன்றுக்கு அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாது, 2014 மற்றும் 2015 ஆண்டுகளிற்குரிய ரூபா 12,575,034 பெறுமதியான அரச உதவிகளின் மீதியொன்று கணக்குகளிலிருந்துபதிவழிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்ச்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம், அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 70,052,175ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 25,346,908ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பில் போடப்பட்ட வருமானம் | 2018 சேர்க்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | 2017 பில் போடப்பட்ட வருமானம | 2017 சேர்க்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 8,930,483 | 9,675,212 | 9,754,153 | 7,275,839 | 8,726,970 | 8,562,664 | 8,729,462 | 7,518,534 |
| ii | வாடகை | 984,000 | 694,520 | 695,015 | - | 815,000 | 564,000 | 564,000 | 495 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,947,940 | 5,017,445 | 5,017,444 | - | 3,906,000 | 1,123,099 | 1,123,099 | - |
| iv | ஏனைய வருமானம | 38,276,800 | 77,331,607 | 11,124,311 | 126,910,254 | 37,518,000 | 23,187,062 | 31,786,671 | 84,656,882 |
| | கூட்டுத் தொகை | 53,139,223 | 92,718,784 | 26,590,923 | 134,186,093 | 50,965,910 | 33,436,825 | 42,203,232 | 92,175,911 |

## 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீத வரி** | | |
| (i) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய நிலுவை வீத வரி ரூபா 7,441,754 யினால் ஆண்டினுள் 68 சதவீதமான அளவொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தறபோர்து அறவிடப்படுகிறது. |
| (ii) | அரச நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 595,941 ஆன நிலுவை வீத வரி மீதியொன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட வேண்டிய நிலுவை வீத வரி மீதியை அறவிட வேண்டும். | நிலுவை வீத வரியை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | சபையினால் 2008 இன் பின்னர் முன்னேற்ற பிரதேசங்களை இனங்கண்டு வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னேற்ற பிரதேசங்களை இனங்கண்டு வீத வரி அறவிட வேண்டும். | வீத வரி பிரதேசங்களை விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. |
| (ஆ) | **குப்பைக் வரி** | | |
| | நிலுவை குப்பை வரி ரூபா 59,950 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை குப்பை வரி இனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவலிக்க ஆளுநரின் அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |

2.2.3 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,339,383உம், முத்திரைக் கட்டணம் ரூபா 76,708,000 உம் ஆனது. | சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கோரிக்கை விடப்பட்டுள்ளது. |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ)** துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் படி 08 விடயங்களிற்காக துணைச் சட்டம் விதிக்கப்படவில்லை. | துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டிய விடயங்களிற்காக துணைச் சட்டம் விதிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவை பிரகாரம் எதிர்காலத்தில், இத் துணைச் சட்டங்களை விதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மேற் கொள்ளப்பட வேண்டிய வேலைகளை குறிப்பாக இனங்காணமல், மூலதன செலவு ரூபா 31,000,219 என செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | மேற் கொள்ளப்பட வேண்டிய வேலைகளை குறிப்பாக இனங்காண வேண்டும். | எதிர்வரும் ஆண்டில், சரியாக செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கிறேன். |

**(இ)** கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கழிவுகளை அகற்றுவதற்கு ஒழுங்கான முறைமை ஒன்றை பின்பற்றாமல், ஒரு டொன் இற்கு ரூபா 500 வீதம் செலுத்தி குண்டசாலை பிரதேச சபைக்கு சொந்தமான கழிவுப் பொருள் கொட்டிலிற்கு வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அதற்காக ரூபா 299,505 செலுத்தப்பட்டிருந்தது. | ஒழுங்கான முறைமை ஒன்றை நடமுறைப்படுத்த வேண்டும். | பொருத்தமான காணியொன்று இல்லாததனால், இவ்வாறு செயற்படுவதுடன்,காணியொன்றை பெற்றுக் கொள்வதற்காள ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டுள்ளன. |

**(இ)** நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி சென்றடையக் கூடிய வகையில் முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் முறையான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவவினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2003 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியுள்ள முத்திரைக் கட்டண மீதி ரூபா 68,776,756 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அட்டவணையை பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததனால், அறவிட முடியாதிருந்தது. |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ஓய்வு பெற்றுச் சென்ற 03 அலுவலர்களின் ரூபா 18,778 ஆன ஊழியர் பிணை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை தொகையினை தேவைக்கேட்ப விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு அலுவலரின் பிணை விடுவிக்கவும் ஏனைய இரண்டு அலுவலரிகளின் ஊழியர் பிணையை ஒடுக்காற்று நடவடிக்கை முடிவடைந்த பின்னர் விடுவிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 ஆண்டு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் 2018 ஆண்டிற்கும் முட்சக்கர வண்டி கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | ஆண்டு தோறும் முட்சக்கர வண்டி ஆய்வொன்றை மேற் கொள்ள வேண்டும். | 2019 ஆண்டில் ஆய்வு நடவடிக்கைகளை மேற் கொள்வதாக அறிவிக்கிறேன். |

3.5 சொத்துக்கள் முகாமை

3.5.1 சுவீகரிக்கப்படாதசொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தீர்த்துக் கொள்ளப்படாத ரூபா 28,764,697 பெறுமதியான 25 காணி மற்றும் கட்டிடங்கள் சபைக்கு சொந்தமாக இருந்தன. | காணி மற்றும் கட்டிடங்களை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். | சபைக்கு சொந்தமாக ஆதனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. |

3.5.2 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அன்பளிப்பாக கிடைத்திருந்த புகைக் கருவி ஒன்று 2014 ஆண்டு முதலும், குபோட்டா நீர் பம்பியொன்று உள்ளிட்ட உபகரணங்கள் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது களஞ்சியத்தில் இடப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை விளைவுள்ளதாக அல்லது குறைபயன்பாடின்றி பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின் ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2010 ஆண்டு முதல் பெறுமதியை இனங்காண முடியாத 147 நீர் உபகரண உருப்படிகள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது அழிவுற இடமளிக்கப்பட்டிருந்தது. | விளைவற்றதாக அல்லது அழிவுற இடமளிக்க நடவடிக்கை எடுக்கக் கூடாது. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின் ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.3 வாகன பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டெக்டர் ஒன்று 2015 ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | பழுதுபார்த்து, பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின் பழுதுபார்த்து, பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பழுதுபார்க்காத காரணத்தினால், டெக்டர் டேலரொண்டு பயன்படுத்துவதற்கு முடியாமலிருந்தது. | பழுதுபார்த்து, பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின் பழுதுபார்த்து, பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பல்வேறு செயற்பாட்டுகளுக்காக ஏனைய | வைப்புச் செய்யப்பட்ட தெகையை | பழைய பதிவேடுகள் மற்றும் பற்றுச் சீட்டுக்களை |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 277,000 ஆன தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவைக்கேற்ற முறையில் மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். | கண்டறிய முடியாததனால், வைப்பு பணத்தை திரும்ப பெற்றுக் கொள்வது தாமதமாக உள்ளது. |

3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நடைமுறைபடுத்தப்பட்ட வேலையொன்றுக்குரிய செலுத்த வேண்டிய தொகை ரூபா 204,000 செலுத்தாததுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் செலவிற்காக ரூபா 140,613 தொகையொன்று சபையின் கவனயீனத்தால் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தியதொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொறுப்புவாந்த தரப்பினரை இனங்காண நி.பி 104 பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

3.8 பெறுகைகள்

ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா 63,187,395 பெறுமதியான அபிவிருத்தி கருத்திட்ட மேற்பாரவை மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடரபான விபரங்கள் உள்ளடங்கும் வகையில் லொக் குறிப்புப் புத்தகம் சரியாக பேணப்பட்டிருக்கவில்லை. | லொக் குறிப்புப் புத்தகம் சரியாக பேணப்பட வேண்டும். | எதிர் காலத்தில் லொக் குறிப்பு புத்தகம் பேணப்படும் என அறிவிக்கிறேன். |